முருகப்பெருமான் துணை

**மகான் பரத்துவாசர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.07.2023**, வெள்ளிக்கிழமை

1. உலகோர் ஞான பலம் அடைய
   உயிர் கொலை நீக்கி வாயென
   பழக்க வழக்க முறைகள்தனை
   பண்புடன் தயவு நெறி கொண்டு அருளும்
2. அருளும் அரங்கமகா ஞானியே
   அண்ணலே உன் பெருமை கூறி
   வரமென சோபகிருது நள்ளி திங்கள்
   வல்லமைபட விய திகதி புகர்வாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 12 ம் நாள், 28.07.2023, வெள்ளிக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
   வழங்குவேன் பரத்துவாசர் யானும்
   சோரமில்லா ஞானவான்கள் படை
   செகமெல்லாம் உருவாக உரைப்பேன்
4. உரைக்கவே சுத்த சைவ நெறி
   உண்மை ஞான வழியாகும்
   கரைபடியா வண்ணம் மக்கள்
   கண்டு வணங்கி ஏற்றுவர
5. வருகவே சாத்வீக குணம்
   வையகத்தாரிடை பெருகியே
   தரும சிந்தை தயவு வடிவான
   தன்னார்வத் தொண்டு நோக்கமாக
6. ஆகவே செயல்பாடுகள் மாறி
   ஆணவம் வதையான செயல்
   மிகையாக அனைத்தும் ஒடுங்கி
   மேலான செயல் வடிவாகியே

7. ஆகியே எங்கும் அமைதிநிலை
அனைத்திலும் சமநிலை பாதுகாப்பு
மகிழவே எல்லாத்துறைகளுமே
மக்களை காக்கும் விதமாக சேவை

8. சேவை மாறி உலகெல்லாம்
செப்பிடுவேன் ஞானவான்களாக
அவதார நிலைகள் பெருகி
அகிலம் நல்லத் தலைமைதனை

9. தலைமைதனை ஞானத் தலைமையாக
தலைவன் முருகப் பெருமானேயென
மலைபோல நம்பகம் பெருகி
மனதாற வழிபாடும் வளர்ந்து

10. வளர்ந்துமே குன்றக்குடியானும்
வழிநடத்த ஞான ஆட்சி
தளர்வின்றி உலகம் அடைந்து
தருமம் குறைபடா வண்ணம்

11. வண்ணம் ஞானிகள் வெளிப்பட
வையகம் இயற்கை ஆசிபட
மண்ணுலகம் எல்லா வளமும் பெறும்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—